சிவமயம்



# அமரர். சோமசேகரம் சச்சிதானந்தம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

26.12.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளிற்கு இன்நூல்

# சமர்ப்பணம்!

எமது குடும்பத்தின் தீப ஜோதியாய் விளங்கி
எம்மை அன்புடன் பேணி வளர்த்து
நல்வழிகாட்டி அறிவு ஒளியூட்டி எம்மை
நன்நிலையில் வைத்து விட்டு அமரத்துவம்
அடைந்த எம் அன்புத்தெய்வத்தின்
பொற்பாதங்களில் காணிக்கையாக
இன் நினைவு மலரினைச் சமர்பித்து
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரர்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !!!

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்
10.10.1956

விண்
25.11.2014

# அமரர்.
# சோமசேகரம் சச்சிதானந்தம்

## திதி வெண்பா

' விளங்கும் ஜய வருஷ கார்த்திகைத் திங்கள்
துலங்கும் பூர்வ பட்ச திருதியை திதியும் - பூண்ட
நன்னாளில் சச்திதானந்தம் எனும் சீராளன்
இன்பமாய் இறைவனடி சேர்ந்தாரே காண் '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்





விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனி மேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந்தாரே

## திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேனுன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென் னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறியொழுகச் செய்துநவையறு காட்சி நல்கி
என்னையும டியனாக்கி யிருவினை நீக்கியாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல்பா தபங்கயங்கள் போற்றி

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சோ.சச்சிதானந்தம்

## அவர்களின்

## வாழ்வியல் சுருக்கம்

தெட்சண கைலாயமாம் திருக்கோணமலையின் பழம்பெருங் கிராமமான ஆலங்கேணி எனும் வளங்கொழிக்கும் ஊரிலே சோதிடர் சோமசேகரத்திற்கும் சிவகாமிப்பிள்ளைக்கும் நான்காவது புத்திரராய் 1956ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் நாளில் தோற்றம் பெற்றார்.

இளவயதில் கல்வி, விளையாட்டு ஒழுக்கம் என்பவற்றில் சிறந்து விளங்கிய இவர் தனது ஆரம்பக்கல்வியை தான் பிறந்த ஆலங்கேணியிலும் பின்னர் உயர்தரகல்வியை கிளிவெட்டி மகாவித்தியாலயத்திலும் பெற்று கொண்டார். கேசவராஜா நவரெத்தினராஜா சௌந்தரராஜா அமிர்தலிங்கம் ஆகிய நான்கு சகோதரர்களோடு ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்.

1976 இல் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர் பதவியைப் பெற்று மூன்று வருடங்கள் சிறப்பாகச் சேவையாற்றினார். அக்கால கட்டத்தில் ஆலங்கேணியைச் சேர்ந்த கந்தசாமி வள்ளியாச்சி தம்பதிகளின் புதல்வி அமுதாவைக் கரம்பிடித்து துணைவியாக்கிக் கொண்டார்.

1979 இல் ஆசிரியர் நியமனம் பெற்று கிழக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளிலும் ஆசிரியப்பணியைச் செவ்வனே மேற் கொண்டார். கூடவே இல்லற வாழ்விலும் வெற்றி கண்டு கமலினி, சிவாஜினி, நவரெத்தின ரூபன், பிரசாந்தினி என நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானார். அவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கினார். மூத்த மகளை அரச உத்தியோகத்தராக்கினார் முதல் மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராய் பணியாற்றிய காலங்களில் துடிப்புடனும் அர்ப்பணிப்பணிப்புடனும் சேவையாற்றி பலரது பாராட்டையும் பெற்றார். 1990இல் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். அக்காலகட்டத்தில் மக்கள் அகதிகளாக்கப்பட்டு முகாம்களில் தஞ்சமடைந்த போது, தானும் அகதிமுகாமில் இருந்து கொண்டே கல்விப் பணியைத் தொடர்ந்தார். பல கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைகள் பலவற்றை ஒன்றிணைத்து தலைமை தாங்கி நடத்தினார். கொத்தணி அதிபராகப் பதவி உயர்வு பெற்றார்.

1990 இல் அழிவடைந்த ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தை 1992 இல் பொறுப்பேற்றுக்கொண்டார். கிளப்பன் பேக்கில் இயங்கிவந்த இப்பாடசாலையை மீண்டும் ஆலங்கேணிக்குக் கொண்டு சென்று புத்துயிர்பெறச் செய்தார். 1ம் தர அதிபராக உயர்வுபெற்றார். கிண்ணியா வலயத்தின் முதற்தரப் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலையைத் தரமுயர்த்தினார். ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுப்பினார். அகில இலங்கை ரீதியில் வெற்றிகளையும், சாதனைகளையும் பெற வைத்தார். 2003ம் ஆண்டுவரை தன்னலம் பாராது தான் பிறந்த கிராமத்துக்காகவும் அப்பிள்ளைகளின் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டார்.

ஒரு சில தீய சக்திகளின் சூழ்ச்சியால் தனது சொந்த கிராமத்தையும் பாடசாலையையும் விட்டு வெளியேறி திருகோணமலை ஆத்தி மோட்டை தமிழ் வித்தியாலயத்தை பொறுப்பேற்ற சில வருடங்களில் நோய்வாய்ப்பட்டதன் நிமித்தம் 2012ம் வருடம் தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இறுதிக் காலங்களில் உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் உளரீதியாக மிகவும் துணிச்சலான ஒரு அதிபராகவே வாழ்ந்து 2014-11-25 இல் இறைபதம் எய்தினார்.

**சுபம்**

**- குடும்பத்தினர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். சோ.சச்சிதானந்தம்

அவர்களின்

# சேவை விபரம்

1. 13.6.1979 - 12.2.1984 வரை - ஆசிரியர்
   தி /ஆலங்கேணி விநாயகர் மகா வித்தியாலயம்

2. 13.02.1984 - 31.12.1985 வரை - ஆசிரியர்
   மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை

3. 1.1.1986 - 31.1.1986 வரை - ஆசிரியர்
   தி/ வாகரை தமிழ் வித்தியாலயம்

4. 1.2.1986 - 24.05.1987வரை - ஆசிரியர்
   மட்டக்களப்பு / விக்னேஸ்வர மகாவித்தியாலயம்

5. 25.05.1987 - 2.1.1990 வரை - ஆசிரியர்
   தி/ விபுலானந்தா கல்லூரி

6. 3.1.1990 - 28.1.1992 வரை - அதிபர்
   தி/சுங்கான்குழி தமிழ் வித்தியாலயம்

7. 29.1.1992 - 17.10.2003வரை - அதிபர்
   தி/ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயம்

8. 18.10.2003 - 27.7.2004 வரை - அதிபர்
   தி/விபுலானந்தா கல்லூரி

9. 28.7.2004 - 6.9.2008 வரை - அதிபர்
   தி/ஆத்தி மோட்டை தமிழ் மகா வித்தியாலயம்

10. 7.9.2009 - 10.10.2012வரை - அதிபர்
    வலயக்கல்வி அலுவலகம் திருகோணமலை

11. 10.10.2012 - ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயாஞ்சலி

## அமரர்.

## சோமசேகரம் சச்சிதானந்தம்

ஆலங்கேணியின் அருந்தவப் புதல்வனே,
காலன் வந்துனை காவிச் சென்ற கதை
சுட்ட புண்ணதில் சுடுகோல் பாய்ந்த நிலை
கேட்ட கணமுதல் கலங்குது என்னிதயம்

ஆசிரியனாய் நானிருக்க நல்மாணவ மணிகளுள்
யோசிக்கும் அளவிற்கு கற்றலில் மினுங்கினாய் நீ
சிறுவனாய் நீயிருந்து என்னிடம் கற்றாய் எதிலும்
சுறுசுறுப்பாகித் துலங்கினாய். போட்டியிலே

வெல்வதே நோக்கம், விழுந்தால் அழுவாய்
சொல்வதைச் செய்வாய் துணிவு உன் பலம்
வல்லவன் நீ வளர்த்தாய் நமதூரின்
கல்விக் கூடம் உன்னால் உயர்ந்தது.

அதிபராய் நானிருந்து ஆற்றிய செயலுக் கெல்லாம்
ஆசிரியராய் இருந்துழைத்த அடித்தளம் சச்சிதானே? நமதூரின்
எழுச்சிக்காய் தோளோடு தோள் கொடுத்தாய். அதனால்
எழுந்தது மகாவித்தியாலயம் அமைந்தது உயர்வகுப்பு

நம்மூர் பிள்ளைகளின் கல்வி உயர்வினுக்கு
மின்னொளி பெற்றோம் பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்த்தோம். திட்டம் வகுத்துச் செயற்பட்டோம்
சதி செய்தாரை வெல்வதற்கு சச்சிதானே துணையானாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வேளைகளில் கால் நடையாய் நடந்து
பிள்ளைபிடி காரர்களாய் பிள்ளைகளைப் பிடித்து
பள்ளிக்கு அழைத்து வந்தோம்: தொண்ணூறில்
கல்லெறிந்த தேனீக்களாய் கிளப்பன்பேர்க் முகாமில்

அகதியாகி அல்லல் பட்டோம். அப்போதும் விட்டோமா?
அனைத்துப் பிள்ளைகளும் அகதி முகாமில் கல்வி
புகட்ட வழிசமைத்தோம். அதற்கு சச்சிதானே அதிபராகப்
பொறுப்பேற்றாய், பழையபடி ஆலங்கேணிக்கு மாற்றினாய்.

உன்னால் உயர்ந்தோர் உணர்வார்களா உன் செயலை?
உதவும் மகத்துவம் உள்ளத்தினுள் முளைவிடுமாம்
உன்சேவை தன்னால் ஆலங்கேணி மீண்டெழுந்தது
உட்கட்டமைப்பு, ஒழுங்கு, உருக்குலையா திருந்தது

சிதைந்த கல்விக் கூடம் சிறக்கத் தினமுழைத்தாய்
மாடிக் கட்டிடங்கள் முளைக்க வழிசமைத்தாய்
வதைப்புக்கு ஆளானோரை வரவழைத்துப் பள்ளியிலே
கல்வியின் தரத்தை உயர்த்தப் பாடுபட்டாய்

வெள்ளிதோறும் பிள்ளைகளை கோயில் செல்ல வைத்தாய்
வெறித்தோடிப் போயிருந்த ஊர் பள்ளியினால் உயிர்த்தது
உன்னை உருக்கி உயிர்தப்பி ஊருக்காய் உழைத்தாய்
உன்பின்னால் வந்தவர்க்கு வழிகாட்டி இடம் விட்டாய்

உன்பெருமை யாரறிவார்? அமுதாவை மணந்தாய்
அருமைக் குழந்தைகளைப் பெற்றாய். விதிவசத்தால்
உன்னுடலை நோய்கள்பல பற்றியதால் படுத்துவிட்டாய்
உன்னுழைப்பை யாரறிவார்? உத்தமனார் தான் அறிவார்.

வந்தவேலை முடிந்ததென்றா வந்தவழி தேடிவிட்டாய்
நொந்து மனம் வெந்து வெந்து அமுதா கதறுகிறாள்
இந்தநிலை வந்ததற்கு இறைவன்தான் காரணமா?
எந்த மதத்தவரும் இதற்கு விதிவிலக்காக மாட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தவர் நிச்சயமாய் போவார் ஒருநாளில்
இறந்தவர்கள் ஒருநாளும் இவ்வுலகு வரமாட்டார்
இறப்பது நிச்சயம் என்ற நியதி என்றும் மாறாதது
எங்கிருந்து வந்தோம்? எவ்வுலகு செல்வோம்? எவர்க்கும் புரியாது

இதனை இதனால் இவன் முடிப்பன் எனவாய்ந்து
அதனை அவன்கண் விட்ட இறைவன் அவை முடிந்தபின்
மெதுவாகக் கட்டையைச் சாய்த்து சட்டயை மாற்றினானா?
மனித மனம் பேதமை நிறைந்தது அதனால் புலம்பித் தவிக்கிறது.

இவ்வுலகில் வந்தாய், எத்தனையோ செயல் செய்தாய்
அத்தனை செயலுக்கும் கருவியாய் செயற்பட்டாய்
அவ்வளவுதான். அவை முடிய நீ வந்தவழி சென்றாய்
அவ்வழியே எல்லோருக்கும் அமைந்துள்ளது இது நியதி.

இருக்கும் வரை எவர்க்கும் இறுமாப்புப் போகாது
இருந்த நிலை மாறி படுக்கையில் கிடக்கும்போது
பெருக்கெடுத்துப் பெருக்கெடுத்து நெஞ்சுள் வலிக்கும்
பெருமூச்சோடு உயிர் காற்றோடு கலந்துவிடும்.

காலம்தான் எந்தக் காயத்துக்கும் மருந்திடுமாம்
நாளை விடியும் மறுநாளும் புலரும் இவ்வாறு
காலச் சுழற்சி சுழன்று கழன்று போகும் நாமும்
காலத்துள் புகுந்து மூழ்கி மூச்செறிவோம், ஆதலால்

கவலை எதற்கு? சச்சி தானந்தா நீ
சச்சிதானந்தமானாய் சாந்தி பெறுவாய்!

- கேணிப்பித்தன் ச.அருளானந்தம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சோமசேகரம் சச்சிதானந்தம்

# இரங்கற்பா!

**அளப்பெரும் சேவை தன்னை ஆரிங்கு மறந்து போவார்?**

காலையின் வரவை முந்திக்
கண்களோ விழித்துக் கொள்ளும்!
வேலையாய் எண்ணா வாறு
விரும்பிநீ, தொண்டே செய்தாய்!
ஆலையூர்ப் பள்ளி தன்னில்
அதிபராய் சச்சி வந்து
காலடி பதித்த காலம்
கூறினால் அதுபொற் காலம்!

ஊரவர் பணம்ப டைத்தோர்
உவர்மலை தேடிச் செல்ல
ஏலவே கற்பித் தோர்கள்
எங்கெங்கோ ஒளிந்து கொள்ள
காவல்கள், தேடல் கண்டும்
கலங்கிடாத் துணிவு கொண்டு
ஆவலாய் கற்பித் திட்ட
அரும்பணி எவர் மறப்பார்?

ஆலயம், கல்விச் சாலை
ஆம்இரு கண்க ளென்றே
வாழ்வினில் நினைத்து வாழ்ந்த
வண்ணமாய் நீ இருந்தாய்!
முப்பது அதிபர் தம்மை
முறையுடன் கண்ட பள்ளி
செப்பமாய்த் திகழ்ந்த உன்றன்
சேவையின் அடையா ளந்தான்!

அதிகாரம் கட்டுக் கோப்பு
அனைத்திலும் விறல் படைத்த
அதிபராய்த் தானி ருந்து
அன்பினால் அரவ ணைத்தாய்!
சதிபலர் புரிந்த போதும்
சஞ்சலம் கொள்ளா நின்று
மதியினால் வெற்றி கண்டாய்,
மனங்களில் நிறைந்தி ருந்தாய்!

ஆலையூர் மக்க ளெல்லாம்
அகதியாய் ஆன வேளை
வான்படைக் கண்கா ணிப்பில்
வருந்தியே வாழ்ந்த காலை
மாணவர் கல்வி தன்னில்
மாண்புகள் சூடிக் கொள்ள
ஆனவை செய்த தெல்லாம்
ஆரிங்கு மறந்து போவார்?

பெற்றோர்கள் வியந்து பேசும்
பெருமைசேர் நடத்தை வைத்தாய்!
கற்றோரைக் கல்லார் தம்மைக்
கனிவுடன் நோக்கி நின்றாய்!
வெற்றிகள் விறல்கள் பெற்று
விளங்கிடக் கல்விச் சாலை
பற்றுடன் பணிபு ரிந்த
பாங்கினை எவர் மறப்பார்?

இங்ஙனம்,
பிரிவுத்துயரில் பங்கேற்கும்,
தி/ஆலங்கேணி அருள்மிகு விநாயகர் ஆலய –
பரிபாலன சபையினர், ஊரவர்.

**(ஆயிலியன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். சோமசேகரம் சச்சிதானந்தம்
# கவிப்பூக்கள்

### இரங்கல் பாடிடும் இன்னலைத் தந்தா!

சோதிடக் கலையில் வல்ல
சோமசே கரத்தார் மைந்தன்!
சாதனை படைக்க வந்த
"சச்சிதா னந்தம்" நீதான்!
காதலாம் அன்பு வாழ்வில்
கலந்திட, "அமுதம்" தன்னைப்
பூதலம் மீதில் ஏற்றே
புகழ்பெற வாழ்ந்தி ருந்தாய்!

ஆண்மக்கள் ஐவர் என்றே
ஆலையூர்ப் பதியில், மேலாம்
மாண்புடன் திளைத்தி ருந்த
மனையிலே மலர்ந்த பூவே!
ஆண்மையின் இலக்க ணங்கள்
அமையவே பொலிவு பெற்று
காண்பவர் வியக்க வாழ்ந்து
காலனூர் விரைந்த ஏறே!

காணரும் கல்வி தன்னைக்
கற்றிடும் பள்ளி வாழ்வில்
மாணவர் தலைவன் ஆகி
மதியினால் மகுடம் பெற்று
ஆனபல் பணிக ளோடும்
ஆசான்கள் அன்பைச் சூடி
கோனென உயர்ந்தி ருந்த
கோலத்தை மறப்ப தெங்ஙன்?

தேக்கிய எண்ணம் போலும்
தேர்விலே பெற்றாய் வெற்றி!
காக்கியாம் உடை தரிக்க
காவல்செய் துறையில் சேர்ந்தாய்!
ஊக்கமாய் உழைத்து மேலாம்
ஊதியம் பெற்ற போதும்
ஆக்கமே சேவை என்றே
ஆசானாய் இணைந்து கொண்டாய்!

திட்டமே இட்டுச் செய்யும்
தீவிர முயற்சி தன்னால்
கட்டுப்பா டொழுங்கு காத்துக்
கல்வியில் உயர்வு சேர்த்து,
பட்டங்கள் பதவி பெற்றோர்
பற்றிட முன்னர் நீயும்
சட்டென அதிபர் என்னும்
சால்பிலனைச் சூடி நின்றாய்!

ஆலையூர்ப் பள்ளி தன்னில்
அதிபராய் இருந்த வேளை
நாடகப் போட்டி தன்னில்
நமதரும் கல்விச் சாலை
தேசிய மட்டம் வென்று
திளைத்திட மகிழ்வி லாடச்
"சாதனை யாளன்" நீதான்
சச்சி நீ, உச்சா னந்தன்!

நன்றியென் றொன்றி ருந்தாய்
நானிலம் வாழும் மாந்தர்
என்றுமுன் பணிகள் தன்னை
ஏற்றமாய் இயம்பு வார்கள்!
குன்றினில் விளக்குப் போலும்
குரிசிலாய் ஒளிர்ந்த நீதான் -
இன்றெம்மை இரங்கல் பாடும்
இன்னலைத்தந்தே(ன்)சென்றாய்?

இங்ஙனம்,
துயரில் பங்கேற்கும்,

அதிபர், ஆசிரியாகள், ஊழியர்கள,
மாணவர்கள்.
தி/கிண்/ஆலங்கேணி விநாயகர் மகா
வித்தியாலயம்

**(ஆக்கம்- தாமரைதாசன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட மா(மனிதர்)மா

கண்ணியமான தலைவனாய்
தனக்கேயுரிய பாணியில்
தனித்துவமான பாடசாலையாய்
தனது கல்விக் கூடத்தை வழிநடத்திய
கம்பீரமான அதிபராய் கண்டேன்
என் முதல் சந்திப்பில்
தன் பள்ளி மாணவர்க்கு
பகுதி நேர வகுப்பெடுக்குமாறு
என்னிடம் கேட்ட போது
தன் பள்ளி மீது கொண்ட
கரிசனையைக் கண்டேன்
பரீட்சைக் கடமைகளிலும்
பாடசாலை நிர்வாகத்திலும்
பல்வேறு நிகழ்வுகளிலும்
பன்முக ஆளுமை கொண்ட
துணிவான தலைமைத்துவத்தைக் கண்டேன்
தன் புதல்வர்கள் மீது
கொள்ளைப் பிரியம் வைத்து
கேட்ட தெல்லாம் கொடுத்து
செல்லமாய் வளர்த்த போது
பாசமுள்ள தந்தையைக் கண்டேன்
தன் பெறா மகளுக்கு - என்னை
வரன் கேட்டு வந்த போது
தன் உறவுகள் மீது கொண்ட
கரிசனையைக் கண்டேன்
மற்றவர் துயரில் தானும் பங்கெடுத்து
தன் உறவுகளுக்கு ஒன்றெண்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடோடி வந்து முன்னின்று செயற்பட்டு
உதவிகள் செய்து நின்ற போது
நல்ல மனிதாபிமானத்தைக் கண்டேன்!
வேசங்கள் போடும் இவ்வுலகில்
நேசித்த உறவுகளும்
காசு கேட்டால் விலகி விடும்
என்று நீங்கள் சொன்னதை
யோசித்துப் பார்க்கிறேன் இன்று.....
அன்று வசதியாய் வாழ்ந்து
விதி வசத்தால் நொந்து
உதவிகள் செய்திட
யாருமே இல்லையென்று
கதிகலங்கி நின்ற போது
கைகொடுத்து வந்தேன்
செய்தது போதும் இனியும் வேண்டாம் என்று
அவசரமாய் விண்ணுலகம் சென்றதால்
கண் கலங்கி நிற்கின்றேன் - உங்கள்
ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகிறேன்.

**மருமகள்**
**P. புவனேஸ்வரி**
**அதிபர்**
**தி / சீனக்குடா தமிழ் வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்கள் ஓய்வூதியத்தை துரிதமாக பெற தேவையான ஆவணங்கள்

அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும்போது ஓய்வூதியச்சம்பளக் கொடுப்பனவைத் துரிதப்படுத்த உத்தியோகத்தரினது சுயவிபரக் கோவையில் இருக்க வேண்டிய முக்கிய ஆவணங்கள் இல்லாமையே இக்கால தாமதத்திற்கு காரணமாக வுள்ளதென்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமது சுயவிபரக்கோவையில் இருக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக தமது கவனத்தைச் செலுத்துதல் ஓய்வூதிய நடவடிக்கையை துரிதப்படுத்தும் செயலாகும். எனவே ஒரு சுயவிபரக் கோவையிலும் இருக்க வேண்டிய ஆவணங்கள் தங்களுக்கு அறியத்தரப் படுகின்றன. தாங்கள் சுயவிபரக் கோவையில் கீழ்க் காட்டப்பட்டுள்ள ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

01. நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனக் கடிதம்.

02. நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை நிரூபிக்கும் கடிதம் அல்லது உடமை பொறுப்பேற்றல்.

03. தகுதிகாண் நிலைக்காலம் நீடிக்கப்பட்டிருப்பின் அதற்குரிய கடிதங்கள்,

04. மருத்துவ அறிக்கை.

05. சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதம் / பதவியில் உறுதிப்படுத்திய கடிதம்.

06. சத்தியப்பிரமாணம் / உறுதியுரை.

07. அமைய சேவைக்காலம் இருப்பின் அதற்குரிய கடிதங்கள்.

08. விதவைகள் அநாதைகள் அங்கத்துவ அட்டையின் ஒரு புகைப்படப் பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அரசாங்க சேவை சகாய நிதியில் பங்குகொண்ட கடிதங்கள்.

10. கோவையில் பதவியுயர்வுடன் தொடர்புடைய கடிதங்கள்.

11. சம்பள ஏற்றங்கள் அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள்.

12. இடமாற்றங்களுக்கு உரிய கடிதங்கள்.

13. வினைத்திறன்காண் தடைகளில் சித்தியடைவதற்குரிய அல்லது அவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டதற்குரிய கடிதங்கள்.

14. ஊழியரின் பிறப்புச் சான்றிதழ்.

15. விவாகச் சான்றிதழ்.

16. பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்.

17. வெளிநாடுகளில் பிறந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் பிறப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டதை நிரூபிக்கப்பட்ட கடிதங்கள்.

18. விவாகரத்து செய்யப்பட்டிருப்பின் அவ்வழக்குத் தீர்ப்பின் ஒரு பகுதி.

19. மீண்டும் விவாகமாகியிருப்பின் விவாகச்சான்றிதழ்.

20. வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளைகள் மரணித்திருப்பின் அவர்களின் மரணச் சான்றிதழ்.

21. வலது குறைந்த பிள்ளைகள் இருப்பின் அவர்களின் வலது குறைவை நிரூபிக்கின்ற மருத்துவச் சான்றிதழ்களும் உரிய மற்ற சான்றிதழ்களும்.

22. வாழ்க்கைத் துணைவர் தொழில்புரிபவராயின் அது பற்றிய விபரங்கள்.

23. தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதி அல்லது சாரதி உத்தரவுப் பத்திரம் இருப்பின் அதன் புகைப்படப் பிரதி ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்.

25. தொழில்சார் தகைமைகள் பெற்றிருப்பின் அச்சான்றிதழ்களின் பிரதிகள்.

26. உள்நாட்டு வெளிநாட்டு பயிற்சியின்போது பெறப்பட்ட சான்றிதழ்கள்.

27. அரைச்சம்பள விடுமுறைகள் மற்றும் சம்பள மற்ற விடுமுறைகள் பற்றிய விபரங்கள்.

28. பிரசவ விடுமுறைகள் பற்றிய விபரங்கள்.

29. திடீர் விபத்துக்கான விடுமுறை பற்றிய விபரங்கள்.

30. வெளிநாட்டு விடுமுறை பற்றிய விபரங்கள்.

31. முற்பட்ட ஆண்டுகளில் விடுமுறைகள் பெற்றிருப்பின் உரிய விபரங்கள்.

32. கற்கை விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் உரிய விபரங்கள்.

33. வருடாந்த விடுமுறை அறிக்கைகள் (பெற்றுக் கொள்ளப்படாத விடுமுறைகளுக்காக ஓய்வு பெறும் தறுவாயில் கொடுப்பனவுகள் செய்யப்படுவதால்)

34. பதவி வெறி தாக்கல் கட்டளையும் திரும்பச் சேவையில் அமர்த்தும் கட்டளைகளும்.

35. ஒழுக்காற்று கட்டளைகளும் அக்கட்டளை நடை முறைப்படுத்திய கடிதங்களும்.

36. ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்காக சமர்ப்பித்த மேன்முறையீடு பற்றிய தீர்மானங்கள்.

37. இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட கடிதங்கள் (இருக்குமாயின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. இரண்டாம் நிலை அடிப்படையில் இந்தக் காலத்தில் அந் நிறுவனத்தால் ஓய்வுச் சம்பளத்திற்காக சம்பளத்திலிருந்து 25 வீதம் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டவை நிரூபிக்கும் கடிதங்கள்.

39. மாகாண சேவைக்கு விடுவித்தல் பற்றிய கடிதங்கள்.

40. மாகாணசேவையிலிருந்த அரசசேவைக்கு உள்ளீர்க்கப் பட்ட கடிதங்கள்.

41. சேவை பாராட்டப்பட்ட கடிதங்களும் குற்றம் குறை தெரிவித்த கடிதங்களும்.

42. கடன்பெறப்பட்டதற்கான கடிதங்கள்.

43. நாளதுவரைபயன்படுத்தி விதிமுறையாக பேணிவருகின்ற வரலாற்றுத்தாள்.

44. அரச விடுதியில் வசிப்பதாக இருந்தால் வீட்டு வாடகை, மின்சாரம், தொலைபேசிக் கட்டணங்கள் செலுத்தப் பட்டுள்ளதற்கான அறிக்கைகள்.

45. பெயர் மாற்றக்கடிதம் (கடமையின்போது திருமணமாகிய பெண் உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

46. உடன்படிக்கை படிவம்.

47. சொத்து பிரகடனம்.

48. கணவர் மனைவியின் / பிறப்புச் சான்றிதழ்.

49. உரிய வேறு ஆவணங்கள்.

இந்த ஆவணங்களில் தங்களுக்குப்பொருத்தமான ஆவணங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றைத் தங்களுக்குரிய திணைக்களங்களில் விரைவில் கையளிக்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டினுள் நீள அகல அடி அளவின் பலன்கள்

| | | |
|---|---|---|
| 06 | அடி | நன்மை |
| 07 | அடி | தரித்திரம் |
| 08 | அடி | மிகுந்த பாக்கியமுண்டு |
| 09 | அடி | மிக்க பீடை |
| 10 | அடி | ஆடு, மாடு, குறைவில்லாத செல்வம் |
| 11 | அடி | பால் சாதமுண்டு |
| 12 | அடி | செல்வம் குறைபோகும் |
| 13 | அடி | எல்லோரும் பகைவராதல் |
| 14 | அடி | சஞ்சலம், நஷ்டம், மனக்கஷ்டம் |
| 15 | அடி | காரிய விக்கினம் பாக்கியம் சேராது |
| 16 | அடி | மிகுந்த செல்வமுண்டு |
| 17 | அடி | அரசனைப்போல் பாக்கியம் சேரும் |
| 18 | அடி | அமர்தவினை பாழாகும் |
| 19 | அடி | மனைவி மக்கள் மரணம் |
| 20 | அடி | இன்பம் தரும் இராஜயோகம் |
| 21 | அடி | பசுக்களுடன் பால் பாக்கியம் |
| 22 | அடி | மகிழ்ச்சி எதிரியஞ்சுவான் |
| 23 | அடி | நோயுடன் கலங்கி நிற்பான் |
| 24 | அடி | வயது குன்றும், மத்திமம் |
| 25 | அடி | தெய்வ கடாஷமில்லை |
| 26 | அடி | இந்திரனைப்போல் வாழ்வார் |
| 27 | அடி | மிக்க செல்வத்துடன் வாழ்வர் |
| 28 | அடி | செல்வமும் தெய்வ கடாஷமும் |
| 29 | அடி | பால் பாக்கியம் செல்வமுண்டு |
| 30 | அடி | லஷ்மி கடாஷம் பெற்று வாழ்வர் |
| 31 | அடி | சிவ கடாஷத்துடன் நன்மை பெருகும் |
| 32 | அடி | முகுந்தனருள் பெற்று வையகம் வாழ்வார் |
| 33 | அடி | நன்மையுண்டு |
| 34 | அடி | குடி விட்டோடும் |
| 35 | அடி | லஷ்மி கடாஷமுண்டு |
| 36 | அடி | அரசோட அரசாற்வாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 37 | அடி | இன்பமும் இலாபமும் உண்டு |
| 38 | அடி | பிசாசு குடியிருக்கும் |
| 39 | அடி | இன்பமும் சுகமும் உண்டாகும் |
| 40 | அடி | என்றும் சலிப்புண்டாகும் |
| 41 | அடி | இன்பமும் செல்வமும் ஓங்கும் |
| 42 | அடி | லஷ்மி குடியிருப்பாள் |
| 43 | அடி | சிறப்பில்லை தீங்குண்டாகும் |
| 44 | அடி | கண்போகும் |
| 45 | அடி | சற்புத்திரர் உண்டு |
| 46 | அடி | வீடுவிட்டு ஓட்டும் |
| 47 | அடி | எந்தநாளும் வறுமையுண்டு |
| 48 | அடி | தீப்படும் |
| 49 | அடி | மூதேவி வாசம் |
| 50 | அடி | பால் பாக்கியம் |
| 51 | அடி | வியாஜ்யம் |
| 52 | அடி | தானியமண்டு |
| 53 | அடி | வீண் செலவு |
| 54 | அடி | லாபம் |
| 55 | அடி | பந்துஜன விரோதம் |
| 56 | அடி | புத்திர உற்பத்தி |
| 57 | அடி | புத்திர லாபம் |
| 58 | அடி | விரோதமுண்டு |
| 59 | அடி | விசனம் |
| 60 | அடி | பொருள் விருத்தி |
| 61 | அடி | பகையுண்டு |
| 62 | அடி | வறுமையுண்டாகும் |
| 63 | அடி | இருப்பும் குலைவும் |
| 64 | அடி | வெகு சப்பத்துண்டு |
| 65 | அடி | ஸ்திரநாசம் |
| 66 | அடி | புத்திர பாக்கியம் |
| 67 | அடி | பயமுண்டு |
| 68 | அடி | திரவிய லாபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 69 அடி | அக்கினி உபாயம் |
| 70 அடி | அன்னியருக்குப் பலன் |
| 71 அடி | இராஜ்ஜியப்பிரியம் |
| 72 அடி | வெகு பாக்கியம் |
| 73 அடி | குதிரை கட்டி வாழ்வான் |
| 74 அடி | பரபலவிருத்தி |
| 75 அடி | சுகமுண்டு |
| 76 அடி | புத்திர அற்பம் |
| 77 அடி | ஆனை கட்டி வாழ்வான் |
| 78 அடி | புத்திர அற்பம் |
| 79 அடி | கன்று காலி விருத்தி |
| 80 அடி | லஷ்மி வாசம் |
| 81 அடி | இடி விழும் |
| 82 அடி | தாத்தா தோஷமுண்டு |
| 83 அடி | மரணபயம் |
| 84 அடி | சௌக்கியம் |
| 85 அடி | சீமானாவான் |
| 86 அடி | இம்சையுண்டு |
| 87 அடி | தண்டிகையுண்டு |
| 88 அடி | சௌக்கியம் |
| 89 அடி | பல வீடுகள் கட்டுவான் |
| 90 அடி | யோக பாக்கியம் உண்டு |
| 91 அடி | வித்துவாம்சம் உண்டு |
| 92 அடி | ஐஸ்வரியம் |
| 93 அடி | தேசாந்திரம் வாழ்வான் |
| 94 அடி | அன்னிய தேசம் போவான் |
| 95 அடி | தனவானாவான் |
| 96 அடி | பிரதேசங்கள் செல்வான் |
| 97 அடி | கப்பல் வியாபாரம் போவான் |
| 98 அடி | பிறதேசங்கள் போவான் |
| 99 அடி | இராஜ்யம் ஆள்வான் |
| 100 அடி | சேமத்துடன் வாழ்வான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையில் அருளிச் செய்த

# பொற் சுண்ணம்

முத்துநல் தாமம்பு மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைமின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருஞ் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்தவுடன் பாடுமின்கள்
கூவும்மின் தொண்டர் புறம்மிலமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே. 2

சுந்தர நீறணீந் தும்மெழுகித்
தூயபொன் நிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்தும்நாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
பாம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமர்
நறு முறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மம்மதில் எய்தவல்லி
திருவேகம் பன்செற்பொற் கோயில்படி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
        உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியார் வந்துநின்றார்
        காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
        நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
        மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்தும்நாமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும்மங்கை
பங்கினம் எங்கள் பராபரனுக்
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 7

வாட்டங் கண்மட மங்கை நல்லீர்
வரிவனை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சேதெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைபட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்த திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடற்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தென் பிறரொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையோ டாடஆட
ஆடப் பெற்சுண்ணம் இடித்தும்நாமே. 10

மாடு நகைவாள் நிலாஎறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 11

மையமா கண்டனை வாடநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத்தத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பெய்யானை மெய்யர்மெய்ம்மைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்வீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்அமர் மொன்பொழியீர்
என்னுடைய ஆரமு தெங்களப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்வீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 13

சங்கம் அரற்றச் சிலப்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைக்க அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரம் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும்நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிரு சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தனை முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியமும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுகணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இன்பம் ஆயினார்க்குப்
துன்பமு மாய்இன் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்குக்
காதியும் அந்தமும் ஆயினாருக்
காட்டப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 20





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 10 - 10 - 1956 | | 25 - 11 - 2014 |



ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும்,
திருக்கோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திரு.சோமசேகரம் - சச்சிதானந்தம்

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

**அவர்கள் 25.11.2014 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசேகரம், சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி அமுதாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி, வள்ளியாச்சி ஆகியோரின் மருமகனும், கமலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், திருகோணமலை), சிவாஜினி, நவரட்ணரூபன், பிரஷாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. ஸ்ரீ. ஜெயபாலன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கோமரன்கடவல), திரு.க.மோகனக்குமார் (லண்டன்), திருமதி. ந. சிந்துஜா ஆகியோரின் மாமனாரும், அமரர். கேசவராஜா (ஓ.பெ.அதிபர்), அமரர். நவரட்ணராஜா (பொதுவைத்தியசாலை - திருகோணமலை), திரு.சோ.சௌந்தரராஜா (தபாலதிபர் - ஆலங்கேணி), அமரர். அமிர்தலிங்கம் ஆகியோரின் சகோதரரும், பவலக்சனா, பவசஞ்சை, திவாகரி, பவரிச்சிகா, யுதிகேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

**அன்னாரின் இறுதிச் சடங்கு 26.11.2014 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு இல 204/11, லோவர் வீதி, உவர்மலை இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்**

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சம்

**அமரர் கந்தசாமி + வள்ளியாச்சி**

↓

- விசுவகேது
- மல்லிகாதேவி
- குமாரி
- மேனகா
- சௌந்தரராஜா
- தேவிகா
- அமுதா
- ரவிச்சந்திரன்
- இராஜசேகர்

**அமரர்கள்**
**சோமசேகரம் + சிவகாமிப்பிள்ளை**

↓

- அமரர். கேசவராஜா
- அமரர் நவரெத்தினராசா
- சவுந்தரராசா
- சச்சிதானந்தம்
- அமிர்தலிங்கம்

அமுதா + சச்சிதானந்தம்

↓

- கமலனி + ஜெயபாலன் → திவாகரி
- சிவாஜினி + மோகனகுமார் → பவலக்ஷனா, பவசஞ்சை, பவரிக்ஷிகா
- நவரெத்தினரூபன் + சிந்துஜா → யுதிகேஷ்
- பிரசாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## அமரர்.

## சோமசேகரம். சச்சிதானந்தம்

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து சகல காரியங்களையும் நிறைவாக செய்து எம் மனதை வென்று துயர் கலைந்த அயலவர்களுக்கும், உறவினர்களுக்கும், இறுதி ஊர்வலத்திலும் ஏனைய காரியங்களிலும் கலந்த அன்பு நெஞ்சங்களுக்கும் இன்றைய நினைவு நாளில் கலந்து ஆத்மசாந்தி வேண்டி எம்மோடு கலந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான அன்பு நிறைந்த நன்றிகள்.

– குடும்பத்தினர் –

இல.204/II, லோவர் வீதி,
உவர்மலை
திருக்கோணமலை


- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.ட்ரேடர்ஸ் 0777695656



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்
தீமை செய்பவன்
தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கிறான்
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்
நேர்மையுடனும் தைரியமாகவும்
பத்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி

"நன்னெறியே இறைவணக்கம்"

சுவாமி விவேகானந்தர்



SS Digital's
SSD K003
A.R.T.Trinco - 077[illegible]5656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org